**Court of the District Munsif cum Judicial Magistrate No.I, Usilampatti.**

**Case No.** : **STC .374/2018**

| | | | |
|---|---|---|---|
| **PW/DW/CW** | : **PW3** | | |
| **Name** | : செல்வராணி | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : |

( Accused present)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 04.11.2024

---

**முதல் விசாரணை:**

நான் கீழ மாதரையில் குடியிருந்து வருகிறேன். அ.சா. 1 மற்றும் அ.சா.2யை எனக்கு தெரியும். நான் கட்டிட வேலை பார்த்து வருகிறேன். பேச்சியம்மாளும் என்னுடன் கட்டிட வேலைக்கு வருவது வழக்கம். விபத்திற்கு பின்னர் அவர் எங்களுடன் வேலைக்கு வருவதில்லை. சுமார் 9 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் மாலை 6.30 மணிக்கு மேல் பூதிப்புரத்தில் கட்டிட வேலையை முடித்துவிட்டு நானும் பேச்சியம்மாளுடன் வீட்டிற்கு செல்வதற்காக பேருந்து நிறுத்ததை நோக்கி வந்து கொண்டிருந்தோம். பேருந்து நிறுத்தத்திற்கு வடக்கிலிருந்து தெற்கே வரவேண்டும். நானும் சாட்சி கூழ்ப்பிள்ளை என்பவரும் முதலில் பக்கத்து கடையில் டீக்குடித்துவிட்டு தெற்கு பக்கம் சென்றுவிட்டோம். எங்களுக்கு –பின்னால் பேச்சியம்மாள் வடக்கு பக்கம் ரோட்டில் கார் வந்ததால் நின்று கொண்டிருந்தார்.

2. தேனி – மதுரை ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்காக வந்த வனத்துறை வாகனத்தை ஆஜர் எதிரி வேகமாக ஓட்டி வந்து நின்று கொண்டிருந்த பேச்சியம்மாள் என்பவர் மீது மோதியதில் கீழே விழுந்து பேச்சு மூச்சு இல்லாமல் கிடந்தார். வனத்துறை வாகனம் நிற்காமல் சென்றது. உடனே நாங்கள் பக்கத்தில் இருந்த டீக்கடைகாரர் அய்யரிடம் சொல்லியதன் பேரில் இருசக்கர வாகனத்தில் சென்று வாகனத்தை மடக்கி பிடித்தார். நாங்கள் கொத்தனார் வீரத்தேவருக்கு போன் செய்து வரச்சொல்லி உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு வந்தோம். அங்கிருந்து மதுரைக்கு கொண்டு போக சொன்னதன் பேரில் வனத்துறை வாகனத்தில் மதுரை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக பேச்சியம்மாளை கொண்டு சொன்றார்கள் . அவர் சுமார் ஒன்றரை மாதங்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டார். அவருக்கு வலது கையிலும், இடது காலிலும் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

டீக்கடை ரோட்டிற்கு வடக்கு பக்கம் உள்ளது. நாங்கள் ரோட்டின் தெற்குபக்கம் சென்ற பின்பு டம் என்று சத்தம் கேட்டு திரும்பி பார்த்தோம் என்றால் சரிதான். சம்பவம் நடந்த தினம் விசாரிக்கவில்லை இரண்டு நாள் கழித்து விசாரித்தார்கள். காயம்பட்ட நபர் எனது சின்னம்மா ஆவார். நான் சம்பவ இடத்தில் நான் அங்கு இல்லையென்றும் சம்பவத்தை கேள்விப்பட்டு உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு வந்தோம் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் பக்கத்தில் இருந்த டீக்கடைகாரர் அய்யரிடம் சொல்லியதன் பேரில் இருசக்கர வாகனத்தில் சென்று வாகனத்தை மடக்கி பிடித்தார் என்று போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். போலீசார்

என்னை விசாரிக்கவில்லை என்றும், காயம்பட்டவர் எனது சின்னம்மா என்பதால் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சம்பவத்தன்று எனது சின்னம்மா மேற்கிலிருந்து வந்த வனத்துறை வாகனத்தை கவனிக்காமல் –திடீரென சாலையை கடந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

S.d./ Selvarani
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.